திரு. தீ. சு. நல்லதம்பி : பேரவைத் தலைவரவர்களே, எனக்கு ஒரு சந்தேகம். இப்படிப்பட்ட குற்றம் புரியக்கூடிய அளவிற்கு அந்த துண்டு நோட்டீஸில் என்ன இருந்தது என்பதைப் பேரவைக்கு அறிவிக்கமுடியுமா என்பதைக் கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : பேரவை முன்னுள்ள கேள்வி:— ''இன்று (5-11-1979) பகல் சுமார் 11-40 மணி அளவில் சட்டமன்றப் பேரவை பார்வையாளர் மாடத்திலிருந்து சில துண்டுப் பிரசுரங்களை பேரவைக்குள்ளே வீசி எறிந்து, உடனே காவலில் வைக்கப்பட்டுள்ள, இராமநாதபுரம் மாவட்டம், தேவகோட்டை வட்டம், சண்முகநாதபுரம் அஞ்சல், மேலசெம்பன்மாறி கிராமத்தில் இருக்கும் திரு. பெரியகருப்பன் அவர்கள் மகன் திரு. ஆறுமுகம் என்று சொல்லிக்கொள்ளும் நபர், பெரும் குற்றம் புரிந்துள்ளார். அவருடைய இச்செயல் பேரவையை அவமதிக்கும் பெரும் குற்றம் என்று இப்பேரவை தீர்மானிக்கிறது.

அவர் மூன்று நாட்கள் வெறும் காவல் தண்டனை அளிக்கப்பட்டு, தண்டிக்கப்பெற வேண்டும் என்று இப்பேரவை தீர்மானிக்கிறது.''

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, திருத்தப்பெற்றபடி நிறைவேற்றப்பெற்றது.

(ஆ) விதி 22-ஐத் தளர்த்தல்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அடுத்து மாண்புமிகு பேரவை முன்னவர் அவர்கள் நாளைய தினம் கேள்வி நேரத்தை தளர்த்துவதற்கான தீர்மானத்தை மொழிவார்கள்.

மாண்புமிகு திரு. கி. மனோகரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன்:—

''சட்டமன்றப் பேரவையில் முதல் ஒரு மணி நேரம் ''வினாக்கள்-விடைகள்'' என்றுள்ள தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை விதி 22-ஐ நாளை (6–11–79) அன்று தளர்த்தி அந்நேரத்தை வேறு அலுவல்களுக்கு எடுத்துக்கொள்ள வேண்டும்''.

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, ஒருமனதாக நிறைவேற்றப்பெற்றது.